KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal eISSN ***2456-5148*** *(Online)*
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

# Agaththil Aram

***Dr. V. Jayapunithavalli***
***M.A,(NET,JRF) Ph.D.,***
*eMail: Punithamj15@yahoo.com*

Received 30/04/2025
Accepted for publication 30/04/2025
Published 01/05/2025

***Abstract***

*Sangam literature divides the lives of the people of the Sangam period into two categories: internal life and external life. Sangam literature divides stories about domestic life into internal life and stories about gifts, war, heroism, and rule into external life. Among these, internal life is when a man and a woman fall in love and enjoy each other. Thus, the feelings they experience between themselves, i.e., internal, are called internal by ancient Tamil literature. The oldest Tamil grammar book available to us today, Tolkappiyam, explains internal and external life in detail in its content. In Sangam literature, internal life is a literary genre that expresses the love between a hero and a heroine. It is called manalathu, and it focuses on pleasure in domestic life.*

***Keywords****: Sangam Literature, Agathil Aram*

# அகத்தில் அறம்

**டாக்டர் வி.ஜெயபுனிதவல்லி**

***கட்டுரைச் சுருக்கம்:***

*அக இலக்கியம் என்பது, ஒரு தலைவன், தலைவி இருவரிடையே ஏற்படும் காதல், காமம், இன்பம் போன்ற அகத்தே நிகழும் உணர்வுகளைப் பற்றியும், அவற்றின் வெளிப்பாடுகளையும் விவரிக்கும் இலக்கியங்களாகும்.ஆணுக்கும் ஒருபெண்ணுக்கும் இடையில் ஏற்படும் காதல் உணர்ச்சியைப் பற்றிக்கூறுவதாகும் களவு ஒழுக்கம் என்பது தலைவனும் தலைவியும் பெற்றோர் அறியாமல் தாமே எதிர்ப்பாராமல் சந்தித்துக் கூடுவது. இக்களவு பிறரின் பொருள்களை அவர்கள் அறியாமலேயே கவர்ந்து கொள்ளும் களவு போலத் தீயது அன்று. அத்தலைமக்கள் பின்பு மணம் செய்துகொண்டு மனையறம் காக்கும் கடமை உள்ளதால் இவையும் அறமாகவே கருதப்படுகிறது.*

**திறவுச்ொற்கள்**: *அக இலக்கியம், காதல், காமம், இன்பம்*

## முன்னுரை

சங்ககால மக்களின் வாழ்க்கை நிலை இரண்டு பிரிவுகளாக இருந்துள்ளதைச் சங்க இலக்கியங்கள் வழி அறியலாம். இல்லற வாழ்க்கை பற்றிய செய்திகளை அகம் என்றும், கொடை, போர், வீரம், ஆட்சி, முதலியவற்றைப் பற்றிய செய்திகளைப் புறம் என்றும் சங்க இலக்கியங்கள் பிரித்துக் காட்டுகின்றன.

பழந்தமிழ் இலக்கியங்கள் மக்களின் அகவாழ்க்கை பற்றி மிகவும் விரிவாகப் பேசுகின்றன. தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் இலக்கியங்களில் அகப்பொருளைக் கையாள்வது பற்றிய இலக்கணங்களை வகுப்பதுடன், அக்காலத்தின் அக வாழ்வின் பல்வேறு அம்சங்கள் பற்றியும் எடுத்துரைக்கின்றது.

**ஐந்திணை**

அகத்திணையின் உட்பிரிவுகளாகிய ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணை என்னும் மூன்றனுள் கைக்கிளை நிகழா ஒழுக்கம், விளையாக் காமம் என்னும் ஒரு துறையளவில், காட்சியளவில் தோன்றும்போதே முடிவடைந்து விடுகிறது. பெருந்திணையாவது கழிபேரொழுக்கம், மிகுதி காட்டும் ஏறிய மடற்றிறம், இளமை தீர்திறம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம், மிக்க காமத்து மிடல் என்ற துறைகளில் அமைகிறது. ஐந்திணையாவது இயல்பொழுக்கம். அகத்திணையின் அடிப்படையான அன்பின் பண்பினை விரிவாகவும், விளக்கமாகவும் அறிதற்கு ஐந்திணையே உறுதுணையாக அமைகிறது. ஐந்திணையின் துறைகள் எண்ணற்றவையாக விளங்குகின்றன.

ஒல்காப் புகழ்பெற்ற தொல்காப்பியர் பண்டைய இலக்கியங்களின் வழிநின்று காதலால் கலப்புற்று மணம் செய்து மாண்புடன் வாழ்ந்த தமிழ் மக்களின் பெருநிலையினைக் கண்டார். மேலும் நூல்களை அமைக்கும் பொருட்டு குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற ஒழுக்கம் நிகழுமிடம் என ஐந்தாகப் பகுத்தார். அவ்வொழுக்கத்தைப் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஐந்தாகக் கண்டார்.

தலைவன், தலைவி, தோழி, செவிலி, பார்ப்பார். பாங்கன், நற்றாய், தந்தை, அன்னை, அறவோர், கண்டோர், இளையர், வாயில், கூற்று, கேட்போர் என அத்துறைகளின் படியும் மக்களைப் பலபடியாகத் தொகுத்தார். புலநெறி வழக்குப்படி இலக்கணத்திற்கு இலக்கியமாகவும், இலக்கியத்திற்கு இலக்கணமாகவும் இவை இன்றளவும் அமைகின்றது.**அன்பின் ஐந்திணை ஒழுகலாற்றில் புலவர் நிலையில் நின்று பேசுபவர்களாக, அறிவு நிரம்பிய தோழியே உள்ளாள் என்று சுருக்கமாகக் கூறிவிடலாம்** (பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள், ப.252.)என்பர்.

**அகப்பாடல் உயிர்களின் பிறப்பிற்கும், பிறப்பதற்கும் அடிப்படை இன்பவுணர்வை உலகின் மருங்கு மறாது வழிமுறை காக்கும் காமத்துடிப்பைப் பொருளாகக் கொண்ட தன்மையுடையது என அறியத்தகும்** ( வ.சுப.மாணிக்கம், தமிழ் காதல், ப.1.) என்பர் .

**அக இலக்கியம்**

அகத்திணைப் பாடல்கள், சுட்டி ஒருவர் பெயர் கொள்ளாமல் தலைவன், தலைவி, தோழி எனப் பொதுப்படவே அமைகின்றன.

**மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்,**

**சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பெறா அர்** ( தொல். புறத். 57)

என்பது தொல்காப்பிய நூற்பா.

ஐந்திணை காதல் ஒழுக்கங்கள் அனைத்து மக்களுக்கும் பொது ஆகும். ஆதலினால் அவற்றைத் தழுவி ஒருவர் பெயர் சுட்டிப் புலவர்கள் பாடார் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

பெயர் சுட்டிக் கூறா மரபு ஏன் இவ்வக இலக்கியங்களில் போற்றப்பட்டது என்பதைக் காணும் போது இவ்வகப் பாடல்களின் மாண்பை அறியலாம்.

**நாட்டுப்புறப் பாடல்களும் அக இலக்கியங்களும்**

வாய்மொழி இலக்கியப் பண்பைச் சங்க இலக்கியப் பாடல்கள் பெற்றுள்ளன. தமிழண்ணல், **நாட்டுப் பாடல்களில் தான், காதற்பாட்டுக்களில் பெயரின்றி அமையும் மரபுண்டு. மனித வாழ்வின் அடிமனப் பண்புகளையெல்லாம் கண்டு கூறும் இப்பாடல்கள் மனித இனப் பொதுமையுடையனவாக மதிக்கப்படுகின்றன. மக்கள் அனைவருக்கும் பொதுவுரிமை உடைமையால் இது தனித்தவர் பெயர் சுட்டப்பெறாது. உலகில் வாய்மொழிப் பாடலின் இவ்வடிப்படைப் பண்பை அப்படியே பெற்று வளர்ந்த பேரிலக்கியம் தமிழிலுள்ள அகத்திணை இலக்கியமாகும்**

தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, ப.188. என்று குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு வாழ்வு நிலையுடைய மக்கள் குறிப்பிட்ட ஒரு காதல் நிலையில் எவ்வாறெல்லாம் நினைப்பர், சொல்லுவர், செய்வர் என்ற உணர்வுத் திறங்களை அகத்திணை சுட்டி உரைக்கிறது.

நல்ல கவிஞன் மடைமாற்றம் பெற்று, போட்டிகளில் புதைந்து போய்விடக்கூடாது என்று கருதிய முன்னைய தமிழறிஞர் திட்டமிட்டு வைத்த சட்டமே, அகப்பாடல்களில் பெயர் புனையக்கூடாது என்பது ஆகும்.

**அகநானூறு குறிப்பிடும் களவு ஒழுக்கம்**

பெண்களுக்கு மதிப்பளித்தலும் பெண்ணின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தலும் பண்டைய அக இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. மணப்பருவம் எய்திய தலைவன், தலைவி தாமாகவே கூடும் கூட்டத்தினை களவு என்பர். தலைவன், தலைவி ஒழுக்கத்திலும் பண்பாடு தெரிகிறது. பண்பாட்டில் அக்கறையுடையவளாகத் தலைவியும், தோழியும் விளங்குகின்றனர். தலைவன் தலைவியைத் தினைப்புனத்தின் கண்ணே கண்டதும் காதல் கொள்கிறான். அவனுடைய அரவணைப்பைத் தலைவி விரும்பினாலும் தன் விருப்பத்தை முதலிலேயே தலைவனிடம் தெரிவித்து விடக்கூடாது என்பதற்காகத் தலைவனிடம் கடும்சொற்கள் கூறி அவனைவிட்டு விலகி நிற்கும் மாண்பை,

**சூர மகளிரின் நின்ற நீ மற்று**

**யாரையோ? எம் அணங்கியோய்! உண்கு’ எனச்**

**சிறுபுறம் கவையினனாக, அதற்கொண்டு**

**இகு பெயல் மண்ணின் ஞெகிழ்பு, அஞர் உற்ற என்**

**உள் அவன் அறிதல் அஞ்சி, உள் இல்**

**கடிய கூற, கை பிணி விடாஅ (அகம். 32:7-12)**

என்ற பாடல் விளக்குகிறது.

**தலைவனின் அன்பின் மிகுதி**

களவு ஒழுக்கத்தின், பின்னர் தலைவியிடத்து உள்ள அன்பினால் அவளைப் பிரிய மனமில்லாது வருந்தும் தலைவனையும் காணமுடிகிறது என்பதை,

**நெஞ்சு நடுங்கு அரும்படர் தீர வந்து,**

**குன்றுழை நண்ணிய சீறூர் ஆங்கண்**

**……………………………….**

**சேய ஆயினும், நடுங்குதுயர் தருமே (அகம். 152:1-24)**

என்ற பாடல் தலைவனின் மனவருத்தத்தை வெளிப்படுத்தும் நிலையில் அமைந்துள்ளதை அறியலாம்.

**அறத்தொடு நிற்கும் பண்பு**

தமிழர் அகவாழ்வின் உயர்ந்த பண்பாக அறத்தொடு நிற்றல் திகழ்கிறது. நடந்ததை நடந்தவண்ணம் தலைவி, தோழி ஆகியோர் உள்ளமையை உண்மையாக எடுத்துக்கூறும் முறையே அறத்தொடு நிற்றலாகும். ஆகவே மன உணர்வின் உண்மை வெளிப்பாடாகத் திகழ்வது அறத்தொடு நிற்றலாகும்.

அறத்தொடு நிற்றலாவது, தலைவன், தலைவியரிடையே தோன்றிய களவொழுக்கம் பிழையாது, அக்களவினைத் தலைவி தோழியிடம், தோழி செவிலியிடமும், செவிலி நற்றாயிடமும், நற்றாய் தந்தையிடமும் முறையாக வெளிப்படுத்துவதாகும்.

களவு கற்பாக மாற வேண்டியது அறமாதலின், அதனை உரியவரிடம் உரிய நேரத்தில் உரிய வகையில் வெளிப்படுத்தும் செயல் அறத்தொடு நிற்றல் எனப்பட்டது. களவு ஒழுக்கமான காதல் ஒழுக்கத்தை முறையே வெளிப்படுத்துவது அறத்தொடு நிற்றலாகும்.

**அறம் எனப்படுவது பல பண்புகளையும் தழுவிய பொதுச்**
**சொல்லாயினும், ஈண்டு பெண்ணுக்கு உரிய முதற்பண்பான கற்பையே**
**குறிக்கும். கற்பென்னும் கடைப்பிடிப்பில் நின்று களவொழுக்கத்தைப்**
**பெற்றோருக்கு வெளிப்படுத்தல் என்பது இத்துறையின் பொருள்.**
**பெற்றோருக்கு அறிவித்தல் தோழியின் நோக்கம் இல்லை.**
**அவ்வெண்ணம் அறிவிப்பது தலைவி கற்பு நெறிப்பட்டு விட்டாள்**
**என்பதனை, முதன்மையாக வலியுறுத்துவதே அவள் நோக்கம்**
(வ.சுப. மாணிக்கம், தமிழ் காதல், ப.68.) **என்பர்**.

அறத்தொடு நிற்றலில் சிறப்பான பண்பாட்டைச் சங்க இலக்கியம் நெறிப்படுத்திக் காட்டுகின்றது. களவொழுக்கத்தில் தலைவனின் மேல் விருப்பம் தோன்றிய தலைவிதான் அறத்தொடு நிற்றலைத் தொடங்கி வைக்கக் கூடியவள். தன் உயிரினும் மேலான தோழிக்குத் தலைவியும், தன்னைப் பெற்ற தாயாகிய செவிலிக்குத் தோழியும், தலைவியைப் பெற்றெடுத்த

நற்றாய்க்குச் செவிலியும், தன் இல்லத் தலைவனாகிய தந்தைக்கு நற்றாயும் அறத்தொடு நிற்க வேண்டுமென்பது சங்க இலக்கியம் காட்டும் மரபாகும்.

களவு ஒழுக்கத்தில் ஒழுகும் தலைவியின் அக வாழ்வை கற்பொழுக்கமாக மாற்றி, சமுதாயத்தில் அவளுக்கு நன்மதிப்பைப் பெற்றுத் தருவதில் தோழி மிகுந்த அக்கறையுடையவளாகச் செயல்படுகிறாள். அதனாலேயே தலைவியின் உடல் மெலிவு கண்டு தாய் வினவியதும், தலைவியொருத்தி தோழியிடம் அறத்தோடு நிற்கிறாள்.

**மலர் தார் மார்பன், நின்றோற் கண்டோர்**

**பலர் தில், வாழி, - தோழி! - அவருள்,**

**ஆர் இருட் கங்குல் அணையொடு பொருந்தி,**

**ஓர் யான் ஆகுவது எவன் கொல்**

**நீர் வார் கண்ணொடு, நெகிழ் தோளேனே? (அகம். 82:14-18)**

**தோழி அறத்தொடு நிற்றல்**

நாணமும் கற்பும் மகளிர் காக்கத் தகும் இரு பேரொழுக்கங்கள். ஆனால் நாணத்தை விட்டேனும் கற்பைத் தலையாகப் போற்றியொழுக வேண்டும் என்பது தமிழர் கண்ட மனையியல் கோட்பாடு. அக இலக்கியத்தில் தோழி எல்லையற்ற உரிமையுடையவள். தலைவியின் உரிமையையும் செயலையும் தன் உரிமையாகக் கொள்ளும் உறவுடையவள், எனினும் தலைவியின் விருப்பமின்றி அறத்தொடு நிற்கும் உரிமை மட்டும் தோழிக்கு இல்லை. இதனை,

**அறத்தொடு நிற்கும் காலத் தன்றி**

**அறத்தியல் மரபிலர் தோழி** (தொல். கற். 45.)
என்று தொல்காப்பியர் சுட்டுகிறார்.

**வரைவு கடாதல்**

சங்க கால மக்கள் இல்லற வாழ்க்கையையே பெரிதும் பாராட்டி வந்தனர். ஒருவனும், ஒருத்தியும் இணைந்து வாழ்வாங்கு வாழ்வாராயின் அவர்களுக்கு வீடுபேறு தானாக வந்தெய்தும் என்பது தமிழரின் கொள்கையாக இருந்தது. அக்காரணத்தினாலேயே அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலையே தமிழரின் பண்பாட்டுக்கு எடுத்துக்காட்டாகக் கொள்வது மரபு.

**களவு ஒழுக்கமானது இரண்டு மாத காலத்துக்கு மேல் நீடிக்கக் கூடாது**
**என்பது மரபு (** இரா. ஜெகதீசன் (ப.ஆ.), அகநானூறு ஆய்வுக்கோவை, ப.1428.)
அதனாலேயே தோழியும் தலைவியின் மேல் அக்கறை கொண்டு பண்பாட்டிற்கேற்பத் தலைவியின் களவு ஒழுக்கத்தைக் கற்பொழுக்கமாக மாற்ற முற்படுகிறாள்.

தோழியொருத்தி தலைவனிடம் தலைவியின் களவு ஒழுக்கம் பலருக்குத் தெரியும் முன்பே, விரைவில் அவளை மணந்துகொள் என்று கூறுகிறாள் என்பதனை,

**என் ஆம்கொல்லோ - தோழி - மயங்கிய**

**மையற் பெண்டிர்க்கு நொவ்வல் ஆக**

**ஆடிய பின்னும், வாடிய மேனி**

**பண்டையின் சிறாவதுஆயின், இம்மறை**

**அலர் ஆகாமையோ அரிதே, அஃதான்று (அகம். 98:21-25)**

என்ற பாடல் உணர்த்துகின்றது. இப்பாடலில், அடிப்படையாக வேலன் வெறியாட்டு நிகழ்ந்தபின் இக்களவொழுக்கம் பலரும் தூற்றும் வண்ணம் இருந்துவிடக்கூடாது என்ற பண்பாட்டு உணர்வுடன் தோழி அடையும்; கவலையையும் புலனாகின்றது.

**கற்பின் மாண்பு**

பெண் தன் உயிரைக் காட்டிலும் நாணத்தைப் போற்ற வேண்டும். அந்நாணத்தை விட கற்பு சிறந்தது எனப் போற்ற வேண்டும். கற்பைப் பேணுவதற்கு உயிர், நாணம் இவற்றை விடவேண்டி இருந்தால் தயங்குதல் கூடாது என்பதனை,

**உயிரினும் சிறந்தன்று நாணே! நாணிலும்**

**செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று எனத்**

**தொல் லோர் கிளவி (**தொல். கள. 23.)
என்ற நூற்பாவில் தொல்காப்பியர் கற்பின் திறத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை**

தலைவனும், தலைவியும் கூடி வாழும் வாழ்க்கை அகத்திணை என்றும், ஐந்திணை என்றும், களவு நெறியென்றும், கற்பு நெறியென்றும் தொகுத்தும் வகுத்தும் சான்றோர்கள் கூறியுள்ளனர். அதன் அடிப்படையில் தமிழர் உலகின் எம்மொழியிலும் எந்நாட்டிலும் இல்லாத போற்றத்தக்க வளமையான வாழ்வியல் முறைகளையும், வாழ்ந்த நிலத்துடன் நெறிப்படுத்தி இரண்டையும் ஒருங்கிணைத்துக் கடைப்பிடித்தனர்.

## குறிப்பு (REFERENCE)

**1.தமிழர் பண்பாடு** , கந்தையாபிள்ளை. ந.சி. சைவசித்தாந்த கழகம், சென்னை –18,

**2.அகநானூற்றுக் காட்சிகள் ,** தமிழண்ணல் பரமேஸ்வரி கிராபிக்ஸ், சென்னை.

Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.